### ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்க புனரமைப்புப் பணி –

# புதிதாகக் கட்டப்பட உள்ள மன்றக் கூடத்திற்கான இடம் ஆய்வு!

## அமைச்சர் கே.என். நேரு நேரில் மேற்கொண்டார்!

சென்னை, அக்.19-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப் பட்டு வரும் புனரமைப்புப் பணியினையும், புதிதாக கட்டப்படவுள்ள மன்றக் கூடத்திற்கான இடத்தினையும் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைத்து மேம்படுத்தும் பணியினையும், புதிதாக கட்டப்படவுள்ள மன்றக் கூடத்திற்கான இடத்தினையும் நேற்று முன்தினம் (17.10.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விக்டோரியா பொது அரங்கம் சென்னையில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க கட்டடமாக திகழ்கின்றது. இக்கட்டடம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியாவின் பெயரால் பெயரிடப்பட்ட சிறப்பு வாய்ந்த கட்டடமாகும். மேலும், சென்னை மாநகரின் கட்டடக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூறும் வகையிலும் அமைக்கப் பட்ட இக்கட்டடம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ராபர்ட் சிசோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் நம்பெருமாள் செட்டியாரால் 1888-ஆம் ஆண்டு இந்த அரங்கம் கட்டப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதனடிப்படையில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியானது நடைபெற்று வருகிறது.

இரண்டு தளம் கொண்ட இக்கட்டடத்தின் நீளம் 48 மீட்டர், அகலம் 24 மீட்டர், பிரதானக் கூரையின் உயரம் 19 மீட்டர் மற்றும் மொத்த கோபுரத்தின் உயரம் 34 மீட்டர் ஆகும். தற்பொழுது இந்த விக்டோரியா பொது அரங்கின் முழுக் கட்டடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு பணிகள், முழு கூரையினையும் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், வெளிப்புறம் மற்றும் உட்புறம் மரத்தளம் மற்றும் மரப்படிக்கட்டுகளுடன் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், ஏற்கனவே உள்ள கட்டடத்தை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்படும் பணிகள், கட்டடத்தின் உறுதித்தன்மை மாறாமல் மறுசீரமைப்பு செய்தல் உள்ளிட்ட விவரங்களை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை இரண்டு வார காலத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ஸ்ரீ இராஜேஸ்வரி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ‘இன்னசெண்ட் பர்சேஸ்’ பிரச்சினை:

# வீட்டு வசதி வாரியம் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் சு.முத்துசாமி விளக்கம்!



சென்னை, அக்.19-

சட்டப்பேரவையில் விவாதத்தின் போது குறுக்கிட்டு வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, Innocent Purchase பிரச்சினையில் வீட்டு வசதி வாரியத்தின் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார்.

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பி.தங்கமணி:** வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் வினாக்கள் -விடைகள் நேரத்தில் பதிலளித்தபோது, innocent purchase வாங்கியவர்களுக்கு ஒழுங்கு முறை செய்யப்படும் என்று சொன்னார்கள். அதில் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, தெரியாமல் வாங்கி தவறு செய்தவர்கள் 25 சதவிகிதம் பேர் என்றால், தெரிந்து வாங்கி தவறு செய்தவர்கள் 25 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள் என்று கடந்த காலங்களில் சொல்லப்பட்டது. ஆக, அப்படி இருக்கும்நிலையில், அவர்களுக்குக் கொடுக்கும்போது, அதை market value ல் கொடுப்பீர்களா அல்லது guideline valueல் கொடுப்பீர்களா, இதற்கு ஒரு cutoff date வைத்திருக்கிறார்களா என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்குப் பிறகு பதிலளித்தால் போதும் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**அமைச்சர் சு. முத்துசாமி:** இதுகுறித்து நான் மிகத் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறேன். இதைப் பற்றி நிறைய மனுக்கள் வந்தன. ஏனெனில், 40 ஆண்டுகாலமாக இருக்கின்ற பிரச்சினை இது. இதனால் ஏறத்தாழ 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அரசாங்கம் ஒரு தெளிவான முடிவை எடுத்தால்தான், 4 இலட்சம் குடும்பங்களைக் காப்பாற்ற முடியும். அனைவருமே 2,000 சதுர அடி, 3,000 சதுர அடி வாங்கிய மிகச்சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அதுபோன்ற மனுக்கள் வரப்பெற்றவுடன், முதல்வர் அவர்கள், மனுக்களை நீங்களோ, அதிகாரிகளோ வாங்கிக் கொண்டிருக்காதீர்கள். ஒரு பெட்டியை வையுங்கள். மக்கள் மனுக்களை அதில் போடட்டும். அதை வாங்கி நீங்கள் பரிசீலித்து நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார்கள்.

பாரபட்சம் இருக்கக்கூடாது என்பதற்காக அப்படிச் சொன்னார்கள். எனவே, 16 இடங்களில் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டன. அதில் வந்த மனுக்களைப் பரிசீலித்து, அதை அரசு நேரடியாக ஒரு துறை முடிவு எடுக்கக் கூடாது என்பதற்காக இரண்டு ஓய்வு பெற்ற IAS அதிகாரிகளை நியமித்து, அவர்கள் மூலமாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த நடவடிக்கையில் அவர்கள் 5 category களாகப் பிரித்திருக்கிறார்கள். அதிலே 2 categoryல் housing boardலிருந்து எந்தப் பணமும் நில உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதனால் அதனை நேரடியாகக் கொடுத்துவிடலாம் என்று முடி வெடுக்கப்பட்டு, அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்தில் ஏதாவது பிரச்சினை இருந்தால்மட்டும் அதை கொடுக்கவில்லை. மற்றவையெல்லாம் கொடுக்கப்பட்டு விட்டது. அடுத்ததாக, 3வது மற்றும் 4வது categoryஐ பொறுத்தவரை, வீட்டு வசதி வாரியம் அதற்காக ஒரு தொகையை, அந்த நிலத்திற்காகக் கொடுத்திருக்கிறது. எனவே, அதனை எப்படி நாம் வசூல் செய்வது? அதற்கு நாம் என்ன interest போடுவது? இவை அனைத்தும் அந்தக் குழு முடிவு செய்து நம்மிடம் தெரிவிக்கும். ஏனென்றால், நாம் அதில் எதையும் சொல்லப் போவது கிடையாது. அந்த 2 retired IAS officers, அந்த committee என்ன report கொடுக்கிறார்களோ, அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், சாதாரண மக்கள் இதிலிருந்து நிம்மதியாக வெளியிலே வர வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கமாக இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பதிலளித்தார்.



‘தஞ்சை பெரியார்’ என்று அழைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மன்னை அவர்களின் 32வது நினைவு தினத்தை முன்னிட்டு மன்னார்குடி நகரக் கழகத்தின் சார்பில் அமைதி பேரணி நடைபெற்று மன்னை அவர்களின் நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. கழக சட்டத்திருத்த குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம் தலைமையில், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, க.தன்ராஜ், ஞானசேகரன், வீரா.கணேசன், சித்தேரி.சிவா, டி.எஸ்.டி.முத்துவேல், நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல் மன்னை த.சோழராஜன், அழகுதிருராஜா மற்றும் பலர் திரளாகப் பங்கேற்றனர்.




# தி.மு.க. இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.5,00,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஆகஸ்ட் மாதத்துக்கான நிதி உதவிகளைப் பெறும் 20 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | க.வித்யா, க/பெ கந்தசாமி, 1/316, விஜயலட்சுமி அடுக்ககம், 3–வது பிளாக், குரோம்பேட்டை சாலை, நன்மங்கலம், சென்னை – 600 117. |
| 2. | கோ.கீர்த்திகா, த/பெ கோட்டைச்சாமி, வடக்குத் தெரு, எரணம்பட்டி, தம்மிநாயக்கன்பட்டி, தேவாரம், தேனி – 625 530. |
| 3. | ஜெ.ஸ்ரீநிதி, த/பெ ஜெய்சங்கர், 6/1, கடும்பாடி நாகம்மன் கோயில் தெரு, சத்திரம், பட்டாபிராம், சென்னை – 600 072. |
| 4. | பீ.சாதிக்பாட்ஷா, த/பெ பீர் பாஷா, 70–ஹெச், அண்ணா நகர், ஆனைமலை, கோயம்புத்தூர் – 642 104. |
| 5. | அ.மலையப்பன், த/பெ அய்யாசாமி, 1/135, அக்கா சாவடி நல்லிச்சேரி, பசுபதிகோயில், தஞ்சாவூர் – 614 206. |
| 6. | வீ.இளையராஜா, த/பெ வீராசாமி, 1/172, பாக்கம், எண்கண், குடவாசல், திருவாரூர் – 612 603. |
| 7. | சீ.கிருத்திகா, த/பெ சீனிவாசன், 11/02, கெனால் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. |
| 8. | பி.சி.யோகேஷ், த/பெ சந்திரசேகர், 16/1, கோதண்டராமணி தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021. |
| 9. | ரா.வசந்தகுமார், த/பெ ராதாகிருஷ்ணன், 58/3, மேகலிங்கபுரம், சிந்துபூந்துறை, ஜங்ஷன், திருநெல்வேலி – 627 001. |
| 10. | சு.பிரேமலதா, த/பெ சுதாகர், 21/27, ஜங்ஷன் ரோடு, பாலக்கரை, விருதாச்சலம், கடலூர் – 606 001. |
| 11. | சா.சுப்பிரமணியன், த/பெ சாம்பசிவம், இராஜாளிக்காடு, வேதாரண்யம், நாகப்பட்டினம் – 614 810. |
| 12. | லோ.யுவராஜ், த/பெ லோகநாதன், 55, கருந்தேவன்பாளையம், நஞ்சை ஊத்துக்குளி, ஈரோடு – 638 104. |
| 13. | மு.முத்துராஜ், த/பெ முனுசாமி, 22/17, பட்டத்தரசி அம்மன் கோயில் வீதி, சிங்காநல்லூர், கோயம்புத்தூர் – 641 005. |
| 14. | த.பாண்டியன், த/பெ தங்கவேல், 2/104, மேலூர், செவல்பட்டி, மருங்காபுரி, திருச்சிராப்பள்ளி – 621 314. |
| 15. | ர.கல்யாணி, த/பெ ரத்தினம், 26, கீழ்தளம், இராமலிங்கேஸ்வரர் கோயில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. |
| 16. | ம.தீபா, க/பெ மணி, 185, வெடியங்காடு, இரா.கி.பேட்டை, திருத்தணி, திருவள்ளூர் – 631 302. |
| 17. | கா.நைனா முகமது, த/பெ காதர் ராவுத்தர், 4122–ஏ, மேல அனுப்பானடி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, மதுரை – 625 009. |
| 18. | மா.பழனிச்சாமி, த/பெ மாரன், 47, 3–வது வீதி, செங்கோட்டையன் நகர், நாதிபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு – 638 476. |
| 19. | அ.சல்மா பர்வின், க/பெ அயூப்கான், 33, ஹெச்.ஐ.ஜி.பி., டி.என்.ஹெச்.பி. குடியிருப்பு, முல்லை நகர், மேற்கு தாம்பரம், செங்கல்பட்டு – 600 045. |
| 20. | த.ஆத்தியப்பன், த/பெ தங்கவேல், 12, 5–வது தெரு, எழில் நகர், சென்னை – 600 118. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18.10.2025

கலைஞர் 100
1924 - 2023

தி.மு.க. இளைஞர் அணி